**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 69** **நாள்: 08.04.2026**

**சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/ ஆணையர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இரண்டாம் கட்டமாக, கணினி குலுக்கல் முறையில் 16 சட்டமன்றத் தொகுதி வாரியாக வாக்குச்சாவடி அலுவலர்கள் தேர்வு செய்யும் பணி இன்று நடைபெற்றது.**

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்-2026 அட்டவணை இந்திய தேர்தல் ஆணையத்தால் 15.03.2026 அன்று வெளியிடப்பட்ட நிலையில், சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளின் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதற்கட்ட கணினி குலுக்கல் சுழற்சி முறை தேர்வு (1st Randomization) மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் முன்னிலையில் 23.03.2026 அன்று நடைபெற்றது.

தொடர்ந்து, வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு (Presiding Officer, Polling Officer-1, Polling Officer-2 and Polling Officer-3) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (Training Electronic Voting Machine), வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடிகளில் பணிபுரிவதற்கு தேவையான முதற்கட்ட பயிற்சி வகுப்புகள் 28.03.2026 அன்று அந்தந்த சட்டமன்றத் தொகுதிகளில் அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, 16 சட்டமன்றத் தொகுதிவாரியாக இரண்டாம் கட்டமாக, வாக்குச்சாவடி அலுவலர்கள் கணினி குலுக்கல் முறையில் (2nd Randomization) தேர்வு செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர்/ ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் முன்னிலையில் இன்று (08.04.2026) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது. சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் 4,085 வாக்குச்சாவடிகள் உள்ளன. இவற்றிற்கு 19,604 வாக்குச்சாவடி அலுவலர்கள் இரண்டாம் கட்டமாக கணினி குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில், தேர்தல் பொதுப் பார்வையாளர்கள், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) மற்றும் தேர்தல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**